பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
03 01 2026 12 40
சனிக்கிழமை நண்பகல்

ஆகாஷவாணி செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் சென்னையில் இன்று நடைபெறும் தேசிய சித்தா தின கொண்டாட்டங்களின் தொடக்க விழாவில் பங்கேற்கிறார்.

2. வீரமங்கை என போற்றப்படும் ராணி வேலுநாச்சியாரின் தியாகமும், தொலைநோக்கு தலைமையும் பல தலைமுறைகளை ஊக்கப்படுத்தும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

3. தமிழகத்தில் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

4. சத்தீஷ்கரில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் 14 நக்ஸலைட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

5. வதோதரா சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Hansini Mathan காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் சென்னையில் இன்று நடைபெறும் தேசிய சித்தா தின கொண்டாட்டங்களின் தொடக்க விழாவில் பங்கேற்கிறார்.

உலக சுகாதாரத்திற்கான சித்தா என்ற மையக் கருத்தினை கொண்டு இந்த ஆண்டு தேசிய சித்தா தினம் கொண்டாடப்படுவதாக ஆயுஷ் துறையின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

சித்தா மருத்துவ முறையில் சிறப்பாக பங்களித்த ஐந்து பேர் இன்றைய நிகழ்ச்சியில் கௌரவிக்கப்படவுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>><><><><><<

வீரமங்கை என போற்றப்படும் ராணி வேலுநாச்சியாரின் தியாகமும், தொலைநோக்கு தலைமையும் பல தலைமுறைகளை ஊக்கப்படுத்தும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அன்னாரது பிறந்த தினத்தையொட்டி சமூக வலைதளத்தில் தமிழில் இதனை பதிவு செய்துள்ள அவர், ஆங்கிலேய ஒடுக்குமுறைக்கு எதிராக கிளர்ந்தெழுந்து இந்தியாவை ஆள இந்தியர்களுக்கே உரிமை உண்டு என்று வலியுறுத்தியவர் ராணி வேலுநாச்சியார் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

நல்லாட்சி மற்றும் கலாச்சார பெருமைக்கான அவரது உறுதிப்பாடு போற்றத்தக்கது என்றும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் மற்றும் மத்திய அமைச்சர்கள் பலர் இந்நாளையொட்டி வேலுநாச்சியாருக்கு புகழாரம் சூட்டியுள்ளனர்.

இதேபோல், நாட்டின் விடுதலைக்காக போராடிய வீரபாண்டிய கட்டபொம்மனின் பிறந்த தினமும் இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி குடியரசு துணைத் தலைவர் உட்பட தலைவர்கள் பலர் அன்னாருக்கு புகழாரம் சூட்டியுள்ளனர்.

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் சமூக வலைதளத்தில் விடுத்துள்ள செய்தியில், ஆங்கிலேய வரி வசூலிக்கும் முறைக்கு எதிராக தீரத்துடன் போராடியவர் வீரபாண்டிய கட்டபொம்மன் என்று குறிப்பிட்டுள்ளார்.

>><><><><<

மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா விரைவில் உருவெடுக்கும் என்று பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

உதய்பூரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மத்திய அரசு மேற்கொண்டுள்ள சீர்திருத்த நடவடிக்கைகள் காரணமாக நாடு விரைவான பொருளாதார வளர்ச்சியை கண்டு வருவதாக கூறினார்.

நம்நாட்டின் இளையோர் சக்தி சுவாமி விவேகானந்தரின் கனவை நனவாக்கும் திறன் கொண்டது என்றும் அவர் தெரிவித்தார்.

புதுமைக் கண்டுபிடிப்புகளில் நமது இளையோர் பல்வேறு சாதனைகளை படைத்து வருவதாகவும் அவர் கூறினார்.

இளையோர் நலனுக்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்து திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

>><><><><<

உள்துறை அமைச்சகத்திற்கான நாடாளுமன்ற ஆலோசனைக் குழு கூட்டம் அத்துறைக்கான அமைச்சர் திரு அமித் ஷா தலைமையில் இன்று அந்தமான் நிகோபார் தீவுகளில் நடைபெற்றது.

தேசிய பாதுகாப்பு, பேரிடர் மேலாண்மை, இணைய பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து இதில் விவாதிக்கப்பட்டது.

>><><><><<

சிறு-குறு தொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்காக இரண்டு திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது.

இந்த திட்டங்கள் வரவேற்கத்தக்கது என்று இந்திய ஏற்றுமதி நிறுவனங்களுக்கான சம்மேளனம் கூறியுள்ளது.

>><><><><<

கேரளாவின் வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கு அம்மாநிலத்தில் பிஜேபி அரசு அமைவது அவசியமாகிறது என்று மத்திய இணையமைச்சர் திரு சுரேஷ் கோபி கூறியுள்ளார்.

கொல்லத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மத்திய-மாநில அரசுகள் ஒருங்கிணைந்து செயல்படும் போது மாநிலங்கள் வளர்ச்சி பெறுவதோடு அதன் பலன்கள் மக்களை விரைவாக சென்றடையும் என்றார்.

>><><><><<

ராஜஸ்தானில் பிஜேபி நிர்வாகிகளுக்கான மாநில அளவிலான பயிலரங்கை அம்மாநில முதலமைச்சர் திரு பஜன்லால் ஷர்மா இன்று ஜெய்ப்பூரில் தொடங்கி வைத்தார்.

கட்சி வளர்ச்சிப் பணிகள் குறித்து இந்த பயிலரங்கில் விரிவாகஎடுத்துரைக்கவுள்ளதாக அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு அருண் சதுர்வேதி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

கட்சியை மேலும் வலுப்படுத்துவதற்கான அம்சங்கள் குறித்தும் இதில் விவாதிக்கப்படும் என்று அவர் கூறினார்.

இதுபோன்ற பயிலரங்குகள் தொடர்ந்து நடைபெறும் என்றும் திரு அருண் சதுர்வேதி தெரிவித்தார்.

>><><><><><<

பீகார் மாநிலத்தில் மூத்த குடிமக்களுக்கான சுகாதார சேவை அவர்களது இல்லங்களுக்கே சென்று வழங்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு நிதிஷ்குமார் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனைத் தெரிவித்துள்ள அவர், மருத்துவ பரிசோதனைகள், செவிலியர் உதவிகள் போன்ற சேவைகள் வழங்கப்படும் என்று கூறியுள்ளார்.

இதற்கான திட்டங்களை முன்னுரிமை கொடுத்து செயல்படுத்துமாறும், அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளதாக திரு நிதிஷ்குமார் தெரிவித்துள்ளார்.

>><><><><><<

மகாராஷ்டிரா உள்ளாட்சித் தேர்தலில் பிஜேபி மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் 68 இடங்களில் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இதில் 44 இடங்களில் பிஜேபியும், இதர பகுதிகளில் அதன் கூட்டணிக் கட்சிகளும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>><><><><><<

தமிழகத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல் மற்றும் திருத்தங்களை மேற்கொள்வதற்கான சிறப்பு முகாம்கள் இன்று மாநிலம் முழுவதும் நடைபெற்று வருகிறது.

அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் மாலை 5 மணிவரை இந்த முகாம்கள் நடைபெறும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>><><><><><<

மேற்கு வங்கத்தில் மூன்று பழங்குடியின பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் இறுதி வாக்காளர் பட்டியலில் இடம்பெறுவார்கள் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

*இதன்படி, Birhor, Toto மற்றும் Sabar பழங்குடியின பிரிவுகளை சேர்ந்தவர்கள் எவ்வித ஆவணமும் சமர்ப்பிக்க தேவையில்லை என்று தேர்தல் ஆணையத்தின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.*

*>><><><><><<*

*தமிழகத்தில் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.*

*இதன்படி, கடைசி மாத ஊதியத்தில் 50 சதவீதம் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியமாக வழங்கப்படும் என்று தமிழக அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.*

*இதற்காக பணியாளர்களின் 10 சதவீத பங்களிப்போடு ஓய்வூதிய நிதியத்திற்கு தேவைப்படும் கூடுதல் செலவினை தமிழக அரசே ஏற்கும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*>><><><><><<*

*சத்தீஷ்கரில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் 14 நக்ஸலைட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.*

*சுக்மா மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் பாதுகாப்புப் படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட போது 12 நக்ஸலைட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டதாக அம்மாநில காவல்துறையினர் தெரிவித்தனர்.*

*இதேபோல், பிஜாப்பூர் மாவட்டத்திற்கு உட்பட்ட Ganganpalli வனப் பகுதியில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் 2 நக்ஸலைட்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் காவல்துறையினர் கூறினர்.*

*அப்பகுதிகளில் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.*

*>><><><><><<*

*மணிப்பூரில் ஆயுதங்களை வைத்திருந்தது தொடர்பாக இரண்டு பேரை அம்மாநில காவல்துறையினர் கைது செய்தனர்.*

*அவர்களிடம் வைத்திருந்த ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

>><><><><><<

ஜார்க்கண்டில் பஞ்சாயத்து அமைப்புகளை வலுப்படுத்துவதற்கான அறிவிக்கையை அம்மாநில அரசு வெளியிட்டுள்ளது.

இதன்மூலம் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளை அவர்களே நிர்வகிப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

பழங்குடியினர் உரிமைகளை பாதுகாக்க இது உதவிடும் என்று அம்மாநில அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

>><><><><><<

இமாச்சலப்பிரதேசத்தில் கல்லூரி மாணவர் உயிரிழந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்துவதற்காக குழு ஒன்றை பல்கலைக் கழக மானியக் குழு ஏற்படுத்தியுள்ளது.

தரம்சாலாவில் உள்ள கல்லூரியில் ராகிங் காரணமாக, மாணவர் உயிரிழந்ததாக கூறப்படும் புகார்கள் குறித்து இந்த குழு விசாரணை மேற்கொள்ளும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>><><><><><<

மத்தியப்பிரதேசத்தில் வயிற்றுப்போக்கு காரணமாக ஆறு பேர் உயிரிழந்தனர்.

இந்தூரில் சுகாதாரமற்ற குடிநீரை பருகியதன் காரணமாக இவர்களுக்கு வயிற்றுப்போக்கு ஏற்பட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

>><><><><><<

தில்லியில் இணையதள குற்றங்களை தடுப்பதற்கான நடவடிக்கைகளை காவல்துறை மேற்கொண்டுள்ளது.

இணைய குற்றங்களில் ஈடுபடும் போலி நிறுவனங்களை குறிவைத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருப்பதாக காவல்துறையின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

>><><><><><<

*பங்களாதேஷ் தேசிய கட்சியின் தலைவராக திரு Tarique Rahman இன்று பொறுப்பேற்கவுள்ளார்.*

*இப்பொறுப்பினை வகித்து வந்த கலிதா ஜியாவின் மறைவை அடுத்து, புதிய தலைவராக திரு Tarique Rahman பொறுப்பேற்கவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

>><><><><><<

<u>*விளையாட்டுச் செய்திகள்*</u>

*வதோதரா சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Hansini Mathan காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*17 வயதிற்குட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 5-11, 11-9, 9-11, 11-7, 11-4 என்ற செட்கணக்கில் Divyanshi Bhowmick -ஐ வென்றார்.*

*இப்பிரிவில் Anvi Gupte, Naisha Rewaskar, Tanishka Kalbhairav ஆகியோரும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.*

*17 வயதிற்குட்பட்டோருக்கான ஆடவர் ஒற்றையர் பிரிவில் Vatsal Duklan, Rajdip Sen, Trishal Surapureddy, Rupam Sardar ஆகியோர் காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.*

>><><><><><<

*அகமதாபாத் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைதேகி சௌதிரி இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 6-4, 6-4 என்ற செட்கணக்கில் ஜப்பானின் Manakawamura -ஐ வென்றார்.*

>><><><><><<

*இந்தியா - தென்னாப்பிரிக்கா இடையேயான முதலாவது இளையோர் ஒருநாள் கிரிக்கெட் போட்டி Benoni-யில் தற்போது நடைபெற்று வருகிறது.*

*இதில் முதலில் பேட் செய்து வரும் இந்தியா சற்றுமுன் வரை 4 விக்கெட் இழப்புக்கு 112 ரன் எடுத்துள்ளது.*

*>>> End of News <<<*